# அறிவித்தல்

## ஹோமியோபதி மருத்துவ சபை

# வெற்றிடங்கள்

ஹோமியோபதி மருத்துவ சபையில் உள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01. பதவி: முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத)

**வெற்றிடங்கள் - 01**

**நியமனத்தின் தன்மை :** நிரந்தரமானது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் ஊழியர் சேமலாப நிதிக்கு உரித்துடையதாகும்.

**சம்பள அமைப்பு :** சேவை வகை தொடர்பான குறியீட்டு எண் மற்றும் மாதாந்த சம்பள அளவு MA1-1-2025-(Rs.46220-10x540-7x630-4x890-20x1190- 83390)

**வெளி விண்ணப்பதாரர்கள்**

**கல்வித் தகைமை :** (அ) கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில்

I. சிங்களம் / தமிழ்

II. கணிதம்

III. ஆங்கில மொழி

நான்கு (04) பாடங்களில் சிறப்பு சித்தியுடன் ஒரே நேரத்தில் ஆறு (06) பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுச் சான்றிதழ் (உயர்தரம்) பரீட்சையில் குறைந்தது மூன்று பாடங்களில் (பொதுத் தேர்வு அல்லாத) தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) பதவிக்கு தேவையான மேலதிக தகுதிகள் கணனி சொல் செயலாக்கம் குறித்த அடிப்படை அறிவு.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

(அ) முதன்மை தரம் / திறமையற்ற மற்றும் பகுதி திறன் சேவை பிரிவுகள் "ஆ", "இ" மற்றும் "ஈ" இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்ட உத்தியோகத்தர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில்

I. சிங்களம் / தமிழ்

II. கணிதம்

III. ஆங்கில மொழி

மேற்குறிப்பிட்ட பாடங்கள் உட்பட, இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் அவற்றில் குறைந்தது மூன்று பாடங்களிலாவது சிறப்புத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பாடத் திட்டத்திற்கமைய கணனி சொல் செயலாக்கம்/தட்டச்சு திறன் அல்லது அதற்கு சமமான பிற திறமைகள் மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.)

(இ) பணியில் நிரந்தர நியமனம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் அந்த நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) உரிய திகதிக்கு முன்னராக நிரந்தர நியமனத்தின் 05 ஆண்டுகள் தொடர்ச்சியாக திருப்திகரமான சேவையை முடித்திருக்க வேண்டும்.

**வயது எல்லை:**

18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அதிகபட்ச வயது எல்லை உள்ளக விண்ணப்பதாரர்களுக்குப் பொருந்தாது.

**ஏனையவை:**

ஒவ்வொரு விண்ணப்பதாரர்களும்,

I. இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும்.

II. பதவிக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை முறையாக நிறைவேற்றுவதற்கும், நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் மன தகுதியினைக் கொண்டிருக்க வேண்டும்.

III. சிறந்த குணநலன் கொண்டவராக இருக்க வேண்டும்.

**விண்ணப்பிக்கும் நடைமுறை:**

விண்ணப்பதாரர்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை,2026.01.08 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய முறையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

குறிப்பு : கடிதத்தின் மேல் இடது மூலையில் **"முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம்"** என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

**பதிவாளர் (பதில்),**
**ஹோமியோபதி மருத்துவ சபை,**
**இல- 94,**
**ஷெல்டன் ஜயசிங்க மாவத்தை,**
**வெலிசரை, ராகமை.**

## 02. பதவி: அலுவலக உதவியாளர் (முதன்மை தொழில்நுட்பம் அல்லாத)

வெற்றிடங்கள் - 04

**நியமனத்தின் தன்மை :** நிரந்தரமானது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் ஊழியர் சேமலாப நிதிக்கு உரித்துடையதாகும்.

**சம்பள அமைப்பு :** சேவை வகை தொடர்பான குறியீட்டு எண் மற்றும் மாதாந்த சம்பள அளவு PL1- 2025 (Rs.40500-10x450-10x490-7x540-15x590- 62530)

**தகைமை**

**கல்வி :** கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர)பரீட்சையில் இரண்டு (02) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**வயது எல்லை :** குறைந்தபட்சம் 18 வயதினை பூர்த்தி செய்தவர்களாகவும்,45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

**ஏனையவை:**

**ஒவ்வொரு விண்ணப்பதாரர்களும்,**

I. இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும்.

II. பதவிக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை முறையாக நிறைவேற்றுவதற்கும், நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் மன தகுதியினைக் கொண்டிருக்க வேண்டும்.

III. சிறந்த குணநலன் கொண்டவராக இருக்க வேண்டும்.

**விண்ணப்பிக்கும் நடைமுறை :** விண்ணப்பதாரர்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை, 2026.01.08 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய முறையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

குறிப்பு :- கடிதத்தின் மேல் இடது மூலையில் **"அலுவலக உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம்"** என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

**பதிவாளர் (பதில்),**
**ஹோமியோபதி மருத்துவ சபை, இல - 94,**
**ஷெல்டன் ஜயசிங்க மாவத்தை,**
**வெலிசரை, ராகமை.**

tamilguru.lk